DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023
Prosecution Witness -P.W.1

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ஜெயா |
| Father's Name | : | வேல்மயில் |
| Village | : | ஆரல்வாய்மொழி |
| Taluk | : | தோவாளை |
| Caste | : | கேரள முதலியார் |
| Calling | : | வீட்டு வேலை |
| Religion | : | கிறிஸ்டின் |
| Age | : | 53 |
| Date | : | 06.08.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2024.

( 1, 2 மற்றும் 4 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். )

06.08.2024

முதல் விசாரணை :-

நான் ஆரல்வாய்மொழியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளில் முதலாவதாக நிற்பவர் பெயர் அன்பழகன். இரண்டாவதாக நிற்பவர் பெயர் விஜயன். மூன்றவதாக நிற்பவர் பெயர் மணிகண்டன். நான்காவதாக நிற்பவர் பெயர் தங்க ஜோஸ். எனது கணவர் பெயர் ஏசுதாசன். அவர் செங்கல் சூளை வைத்திருந்தார். எனக்கு இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும். மகன்களின் பெயர் ஜார்ஜ் ஆன்றனி மற்றும் சுதன். நான் எனது கணவர் செங்கல் சூளை நடத்தி வந்தார். அந்த செங்கல்

சூளையில் அன்பழகன் மனைவியும், அவரது அண்ணன் மகனும் வேலை செய்து வந்தார். தங்கராஜின் மனைவியுடன் எனது வீட்டுக்காரர் பழகி அவர்கள் தூத்துக்குடி சென்று விட்டார்கள். தங்கராஜ் அன்பழகனின் உடன் பிறந்த அண்ணன். அவருடைய மனைவி விஜயனின் அக்கா. நான்கு ஆண்டுகள் கழித்து தங்கராஜனின் மனைவி முதலில் வந்தார். அதன்பிறகு எனது வீட்டுக்காரரும் வந்துவிட்டார். அதன்பிறகு அன்பழகன், விஜயனும் எனது வீட்டுக்காரருடன் எப்போதும் சண்டை இழுப்பார்கள். ஒரு முறை விஜயன் எனது வீட்டுக்காரரின் மண்டையை உடைத்துவிட்டார். அதனால் வீட்டுக்காரர் பூதப்பாண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன்பிறகு 05.05.2023 அன்று எனது மகனுக்கு மாத்திரை வாங்குவதற்கு ஆரல்வாய்மொழியில் உள்ள அப்போல்லோ மருந்தகத்துக்கு எனது வீட்டுக்காரர் போனார். அப்போது இரவு 8.00 மணி இருக்கும். அப்போது மணிகண்டனும், அன்பழகனும் சேர்ந்து எனது வீட்டுக்காரரின் மண்டையை உடைத்து விட்டார்கள். பீர் பாட்டிலால் அடித்து உடைத்தார்கள். ஆரல்வாய்மொழி போலீசார் அது குறித்து வழக்கு பதிவு செய்தார்கள். 09.06.2023 அன்று மாலை 6.00 மணிக்கு எனக்கு உடல்நிலை சரியில்லாததால் ஆரல்வாய்மொழி கனி மருத்துவமனைக்கு என்னை எனது வீட்டுக்காரர் கூட்டிச் சென்றார். என்னை மருத்துவமனையில் விட்டுவிட்டு எனது கணவர் செங்கல் சூளைக்கு போய்விட்டார். நான் மருத்துவமனையிலிருந்து எனது பக்கத்து தெருவை சேர்ந்த கணேசன் என்பவர் என்னை பைக்கில் வீட்டிற்கு கூட்டி வந்தார். என்னை வீட்டிற்கு செல்லும் பாதையில் விட்டார். நான் பன்னீர் வீட்டிற்கு குழு விசயமாக போனேன். அப்போது எனது உறவினர் சண்முகநாதன் போன் செய்தார். அப்போது இரவு 8.00 மணி இருக்கும். டேவிட் கடைக்கு பக்கத்தில் உள்ள பாப்பா வீட்டிற்கு முன்பு அன்பழகன், விஜயன், மணிகண்டன், ஜோஸ் ஆகிய நான்கு பேர் நிற்கிறார்கள் என சொன்னார். எனது வீட்டுக்காரரை குத்திக் கொல்வதற்காக அவர்கள் நிற்பதாக சொன்னார். நான் பயந்து போய் அந்த இடத்திற்கு போனேன். எனது வீட்டுக்காரர் பைக்கில் அப்போது வந்தார். தெரு விளக்கு நன்றாக எரிந்ததில் அது

தெரிந்தது. ஜோஸ் பையன் ஓடி வந்து எனது வீட்டுக்காரரின் வண்டியை மறித்தார். மணிகண்டன், விஜயனும் எனது வீட்டுக்காரரின் தோளை பிடித்துக் கொண்டார்கள். ஜோஸ் பின்புறமாக பிடித்துக் கொண்டார். அன்பழகன் கத்தியால் எனது வீட்டுக்காரரை குத்தினார். அப்போது இரவு 8.15, 8.30 மணி இருக்கும். எனது வீட்டுக்காரரை வலது பக்கம் நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதியில் குத்தினார். நானும், சண்முகநாதனும் சத்தம் போட்டோம். எங்களை தேவுடியாமக்க என்று சத்தம் போட்டு குத்தி விடுவோம் என மிரட்டினார்கள். அன்பழகனும், மணிகண்டனும் ஒரு பைக்கில் போய் விட்டார்கள். விஜயனும், தங்க ஜோஸ் ம் இன்னொரு பைக்கில் போய்விட்டார்கள். நான் அழுது கொண்டிருந்தேன். அப்போது ஸ்டீபன் பைக்கில் வந்தார். மருத்துவமனைக்கு கூட்டிச் செல்ல கேட்டேன். எனது கணவரை ஸ்டீபனும், சண்முகநாதனும் அந்த பைக்கில் ஆரல்வாய்மொழி கனி மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்கள். கணேசன் அந்த பக்கம் பைக்கில் வந்தார். அவரோடு நானும் மருத்துவமனைக்கு போனேன். மருத்துவமனையில் முடியாது என சொல்லி விட்டார்கள். ஸ்டீபன் எனது மகன் ஜார்ஜ் ஆன்றனிக்கு போனில் தகவல் சொன்னார். அங்கிருந்து எனது வீட்டுக்காரரை மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு வைத்து 9.00 மணிக்கு எனது வீட்டுக்காரர் இறந்துவிட்டார். அங்கிருந்து ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போஸ்ட் மார்டம் பண்ணக் கூடிய இடத்தில் கொண்டு வைத்தார்கள். அதன்பிற்கு ஆரல்வாய்மொழி போலீசார் வந்தார்கள். அப்போது என்னுடைய மகன் சதனின் நண்பர் விஜயனை வைத்து பெட்டிசன் எழுதினோம். நான் சொல்ல சொல்ல விஜயன் எழுதினார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அப்போது எழுதப்பட்ட பெட்டிசன் தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள அறிவேன் சாட்சியாக எனது மகன் பெட்டிசனை படித்துப் பார்த்துவிட்டு கையெழுத்து போட்டார். அந்த ஆவணம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் எனது கணவரை அன்பழகன் குத்தினான். அது சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் சட்டைதான் அப்போது எனது கணவர் போட்டிருந்தது. அது சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஜட்டி அவர் அப்போது எனது கணவர் அணிந்திருந்ததுதான். அது சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் லுங்கி அவர் அப்போது எனது கணவர் அணிந்திருந்ததுதான். அது சா.பொ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கணவர் அப்போது பயன்படுத்திய பைக் என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ளதுதான். அந்த போட்டோ ச.பொ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது (வாகனம் போலீசாரால் கொண்டு வரப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளது). அந்த பைக் சா.பொ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் ஓட்டிச் சென்ற இரண்டு வாகனங்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இந்த சம்பவம் குறித்து பூதப்பாண்டி குற்றவியல் நீதிமன்றத்துக்கு சென்று வாக்குமூலம் அளித்தேன். அதில் நான் கையொப்பம் செய்தேன். எதிரிகள் பயன்படுத்திய வாகனங்கள் சா.பொ. 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை உணவு இடைவேளைக்கு பிறகு ஒத்தி வைக்கப்படுகிறது.)

<u>குறுக்கு விசாரணை (1 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

போலீசாரிடம் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்தை எழுதியது விஜயனா என்றால் ஆமாம். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரியுமா என்றால் தெரியும் ஆரல்வாய்மொழியை சேர்ந்தவர். என்னுடைய மகனின் நண்பர். என்னுடைய மகன் அந்த மனுவை எழுதவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது இந்த மனுவை என்னுடைய மகன் சுதன் எழுதியதாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். ஆசாரிபள்ளத்துக்கு வந்ததாக சொல்லும் போலீசார் ஆரல்வாய்மொழி போலீசாரா, கோட்டார் போலீசாரா என்றால் ஆரல்வாய்மொழி போலீசார். போலீசார் வந்தவுடன் என்ன சம்பவம் எப்படி நடந்தது என கேட்டார்களா என்றால் ஆமாம். நான் அவர்களிடம்

தெளிவாக சொன்னேன் என்றால் சரிதான். அப்போது வந்த போலீசார் யார் என்றால் பெயர் எனக்கு தெரியாது. நான் சொன்னதை அவர்கள் எழுதி கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் நாங்கள் எழுதி கொடுத்ததை தான் வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் எதுவும் எங்களிடம் எழுதி கேட்டார்களா என்றால் ஆமாம். அதன்பிறகு தான் நாங்கள் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். எழுதியதாக சொல்லும் விஜயன் அதில் கையொப்பம் செய்தாரா என்றால் அவர் செய்யவில்லை. ஆரல்வாய்மொழியிலிருந்து பூதப்பாண்டி செல்லும் சாலையின் வடக்கு பக்கத்தில் தெற்கு பார்த்து ஒரு சிஎஸ்ஐ சர்ச் ஒன்று உள்ளது என்றால் ஆமாம். அதற்கு நான்கு புறமும் காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். அந்த சர்ச்சின் கிழக்கு பக்கம் ஒரு கிரவுண்ட் உள்ளது என்றால் சரிதான். கொஞ்சம் தள்ளி செல்ல வேண்டும். அந்த சர்ச்சை தொட்டு மேற்கு பக்கத்தில் வடக்கு பார்த்து ஒரு ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டின் மேற்கு பக்கம் ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி ரோட்டை பார்த்து டேவிட் ன் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அதில் டேவிட் தேங்காய் வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். இன்னொரு கடையில் கட்டிட தளவாடங்கள் வாடகைக்கு விடும் கடை ஒன்று உள்ளது என்றால் சரிதான். என்னை கணேசன் கொண்டு வந்த விட்டதாக நான் சொல்வது சர்ச்சை தொட்டு வடக்கு பார்த்து செல்லும் ரோட்டுக்கு நேர் எதிரே தெற்கு பார்த்து போகும் கிறிஸ்து நகர் போக கூடிய ரோடு என்றால் சரிதான். அந்த திருப்பத்தில் தான் கணேசன் என்னை கொண்டு விட்டாரா என்றால் ஆமாம். அந்த ரோட்டில் சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் வில்லவிளை ஊர் உள்ளது. அந்த ஊரில் தான் இந்த வழக்கின் சாட்சி சண்முகநாதனின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த திருப்பத்திலிருந்து 400 அடி தொலைவில் மேற்கு பார்த்து ஒரு சந்து உள்ளது என்றால் சரிதான். அது சுமார் 5 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். அந்த சந்து ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து 300 அடி தொலைவில் இந்த வழக்கின் சாட்சி பன்னீரின் வீடு உள்ளது என்றால் சரியல்ல. 3 வீடுகள் தள்ளி உள்ளது. அந்த வீடு தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். அந்த

வீட்டில் இருந்து பார்த்தால் ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி மெயின்ரோடு தெரியுமா என்றால் தெரியாது. கிறிஸ்து நகர் செல்லும் அந்த சாலையின் வலது புறம் முதல் வீடு பாப்பா வீடு என்றால் சரிதான். அந்த வீடு ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி ரோட்டை பார்த்து உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு மாடி வீடு என்றால் சரிதான். அதில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மேற்கு பக்கம் வின்சென்ட் என்பவரின் வீடும், கடையும் உள்ளது என்றால் சரிதான். அவருடைய வீடும், கடையும் அந்த ரோட்டை பார்த்துதான் உள்ளது என்றால் சரிதான். வின்சென்ட் வீட்டின் காம்பவுண்ட்டிற்கு மேற்கு பக்கம் ஒரு சிறிய தெரு 5 அடி அகலத்தில் தெற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான். அந்த சிறிய சந்தின் மேற்கு பக்கம் சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். அதை தொட்டு செங்கல் சூளை உள்ளது என்றால் சரிதான். சுமார் 100 அடி தள்ளி உள்ளது. அதில்தான் நானும், எனது கணவரும் செங்கல் சூளை நடத்தி வந்தோம் என்றால் சரிதான். அந்த செங்கல் சூளையில் சிறிய கிரவுண்ட் போல உள்ளது என்றால் சரிதான். அந்த கிரவுண்ட்ல் வைத்துதான் எனது கணவர் அடிமுறை சொல்லி தருவார் என்றால் அதெல்லாம் தற்போது இல்லை முன்பு இருந்தது. 30 வருடங்களுக்கு முன்னர் சொல்லிக் கொடுத்தார். அவர் இறப்பது வரைக்கும் சொல்லி கொடுத்ததார் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னை மருத்துவமனையில் விட்டுவிட்டு செங்கல் சூளைக்கு வருவதாக தான் சொல்லிவிட்டு சென்றார் என்றால் சரிதான். அவ்வாறு செங்கல் சூளைக்கு வந்து அன்றிரவு 7.00 மணி வரையில் அவ்வாறு சிலம்பம், பிச்சுவா கத்தி போன்ற விளையாட்டுகளை சொல்லிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய ஊரில் அன்றைய தினம் இரண்டு இடங்களில் சண்டை நடந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய ஊரில் சாதி கலவரம் பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் தொடர்பாக எனது கணவர் மீதும், மற்ற ஆட்கள் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலம் சரியா அல்லது நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் சரியா

என்றால் போலீசாரிடம் கொடுத்த மனுவில் சொல்லியது சரி. பன்னீரின் வீட்டில் குழு சம்பந்தமாக எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் கால் மணி நேரம் இருந்தேன். என்னுடைய செல்போன் எண். 9687758201. அந்த செல்போன் தற்போது என்னுடைய வீட்டில் உள்ளது. அந்த செல்போனை வைத்து சண்முக நாதன் சொன்ன தகவலை உடனடியாக எனது கணவருக்கு சொன்னேனா என்றால் இல்லை. என்னுடைய பிள்ளைகளுக்கும் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த செல்போனை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. சண்முகநாதனின் செல்போன் எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது செல்போனில் உள்ளது. அதை வைத்துதான் போன் வரும் போது சண்முகநாதனின் போன் என தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். நான் போகும்போது எனது கணவர் எந்த பக்கத்தில் இருந்து வந்தார் என்றால் சூளை பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். சிஎஸ்ஐ கோவில் பக்கம் கணேசன் என்னை விடும்போது எனது கணவர் அங்கிருந்தாரா என்றால் இல்லை. என்னை சிஎஸ்ஐ கோவில் பக்கம் கணேசன் விடும்போது எனது வீட்டுக்காரர் அப்போது அங்கே என்னை அழைத்துச் செல்வதற்காக நின்றிருந்தார் என பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும்போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் அப்போது வந்துக் கொண்டிருந்தார். என்னை கணேசன் இறக்கி விட்ட பிறகு அங்கிருந்து பன்னீர் வீட்டிற்கு சென்றதாகவோ, குழுவை பற்றி பேசியதாகவோ நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு Stroke அப்போது வாய் சரியாக பேசவரவில்லை. அதனால் என்ன சொன்னேன் என்று தெரியவில்லை. அவ்வாறு வாக்குமூலம் கொடுக்கும்முன்பு நீதிபதி என்னிடம் நிறைய கேள்வி கேட்டிருப்பார் என்றால் ஆமாம். அதில் ஒவ்வொரு கேள்விக்கும் நான் பதில் சொல்லி, அந்த பதிலுக்கு அருகே கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாக்குமூலம் கொடுப்பதற்கு சரியான நிலைமையில் உள்ளேன் என்பதை தெரிந்து கொண்ட பிறகு தான் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். கணேசன் என்னை இறக்கி விட்ட பிறகு பன்னீர்

வீட்டிற்கு நான் செல்லும்போது எதிரிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எனது கணவருக்கு என்ன என்ன காயம் ஏற்பட்டது என்று மருத்துவமனையில் வைத்துதான் பார்த்தேனா என்றால் ஆமாம். எனது கணவருக்கு மார்பில் எந்த காயமும் இல்லை என்றால் சரியல்ல இருந்தது. நான் சொல்வது போல எனது கணவருக்கு நான் சொல்லக் கூடிய இடத்தில் வைத்து காயம் எதுவும் ஏற்பட வில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு செங்கல் சூளையின் பக்கத்தில் வைத்துதான் காயம் ஏற்பட்டிருக்குமா என்றால் சரியல்ல. எனது கணவருக்கு காயங்களில் கட்டுபோட்டது யார் என்றால் கனி மருத்துவமனையில் போட்டார்கள். உடனடியாக அனுப்பிவிட்டார்களா என்றால் ஆமாம். 108 ல் அனுப்பிவிட்டார்கள். எனது கணவரின் மீது முதல் எதிரிக்கு விரோதமோ காழ்ப்புணர்ச்சியோ கிடையாது என்றால் சரியல்ல. முதல் எதிரியின் மனைவி எங்கள் செங்கல் சூளையில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல வேலை செய்தார். வழக்கிற்காக வேலை செய்தார் என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு எதிரிகள் எனது கணவரின் கையை பிடித்துக் கொண்டார் என்றும், ஒரு எதிரி பின்புறம் கழுத்தை பிடித்துக் கொண்டார் என்றும், போலீசார் விசாரிக்கும்போதோ அ.சா.1 புகாரிலோ நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் யாரும் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டவுடன் அந்த இடத்தில் வைத்து கட்டு எதுவும் போடவில்லையா என்றால் போடவில்லை. நான் சொல்வது போல, சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஸ்டீபனின் பைக்கில் தான் எனது கணவரை காயத்துடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்களா என்றால் ஆமாம். எங்கள் ஊரில் ஏற்பட்ட சாதிக் கலவரத்தில் எனது கணவர் ஈடுபட்டு அதில்தான் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் இறப்பதற்கு முன்பு ஒரு முறை சிஎஸ்ஐ சர்ச்சிற்குள் உள்ளே சென்று கலவரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் அடிமுறை சொல்லிக் கொடுத்து வந்து பலரை அடித்து வருவது சகஜமாக நடந்தது என்றால் சரியல்ல. அவருக்கு பல எதிரிகள் இருந்தார்கள் என்றால்

சரியல்ல. ஆஜர் எதிரிகள் மட்டும்தான் எதிரிகள். அதற்கு முன்னரும் அவ்வாறும் கலவரம் ஏற்பட்டதால் தான் என்னுடைய கணவர் தூத்துக்குடிக்கு போய்விட்டார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு என்னுடன் திருமணம் ஆவதற்கு முன்பாக வேறு திருமணம் நடந்தது என்றால் சரிதான். முதல் மனைவி போன பிறகு என்னைக் கட்டிக் கொண்டார். முதல் மனைவி மூலம் பிரபாகரன் என்ற மகன் உண்டு என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் ப்ளோரா என்றால் சரிதான். எனது கணவருக்கு காயம் பட்டதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் சமயத்தில் நான் சொல்லக் கூடிய இடத்தில் நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிரிக்கும், எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. சா.பொ. 1 கத்திக்கும், முதல் எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 மனு போலீசார் தயார் செய்து அதன்பேரில் நான் கையொப்பமிட்டது என்றால் சரியல்ல. நான் அடையாளம் காட்டிய பைக்குகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அந்த பைக்குகளுக்கும், எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் பார்க்காததால் தான் அ.சா.ஆ. 1 மனுவில் குத்தியவர்களை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்காததால் தான் எனது கணவருக்கு ஏற்பட்ட காயங்களை மருத்துவமனையில் வைத்து மருத்துவர் பார்க்கும்போது பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (2 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

சண்முகநாதன் என்பவர் எனது கணவரின் உறவினரா என்றால் ஆமாம். பன்னீர் எங்கள் குடும்பத்திற்கு மிக நெருக்கமாக பழக்கபட்டவர் என்றால் சரியல்ல. ஸ்டீபன் என்பவர் எங்களுக்கு நெருங்கிய உறவினரா என்றால் இல்லை. அவர் வேறு சாதி நாங்கள் வேறு சாதி. அவர் நாடார் சாதியை சேர்ந்தவர். என்னுடைய கணவரின் தங்கை

புனிதாவின் மகளை ஸ்டீபன் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. சண்முகநாதன் கட்டியுள்ளார். ஸ்டீபன் என்பவர் வேறு சாதியாக இருந்தாலும், எனது கணவரின் உறவினரை கல்யாணம் செய்துள்ளதால் எங்களுக்கு நெருக்கம் என்றால் சரியல்ல. நாங்கள் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. அன்றைய தினம் வழியில் வரும்போது எனது கணவர் குத்துப்பட்டதால் அவரை மருத்துவமனைக்குக் கூப்பிட்டேன். ஸ்டீபனுக்கு வனிதா என்ற மனைவி உண்டு என்றால் சரிதான். அவருக்கு ராணி என்ற குண்டு ராணி என்ற மனைவி உண்டு என்றால் அது எனக்கு தெரியாது. ஸ்டீபனின் அம்மா பெயர் ராணி. கணேசன் என்பவர் என்னுடைய தாய் மாமன் மகனா என்றால் இல்லை. மாமாவா என்றால் இல்லை. அவரை சும்மாவே மாமா என கூப்பிடுவேன். அவர் என்னுடைய மகளின் ஆஷா வை காதலித்து வந்தார் என்றால் சரியல்ல பொய். அந்த வகையில் கணேசனும் எங்கள் குடும்பத்திற்கு மிகவும் நெருங்கியவர் என்றால் சரியல்ல. சுரேஷ் கால்டன் என்பவர் எனது மகன் சுதனின் நண்பரா என்றால் இல்லை. எதிரி அன்பழகனுக்கு சொந்தக்காரர். என்னுடைய மகன் சுதன் என்பவர் சுரேஷ் கால்டன் என்பவரின் டெம்போவை ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் டெம்போவை தான் ஓட்டுகிறார். எங்களுக்கு எத்தனை டெம்போ உள்ளது என்றால் 2 டெம்போ உள்ளது. சுரேஷ் கால்டனுக்குதான் இரண்டு டெம்போ உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மதன் என்பவர் என்னுடைய கணவரின் தம்பி மகன் என்றால் சரிதான். என்னுடைய தங்கைதான் அவனுடைய அம்மா. கணபதி என்பவர் சண்முகநாதனின் சித்தப்பா மகன் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்வது ஆரல்வாய்மொழியிலிருந்து பூதப்பாண்டி செல்லக்கூடிய வண்டிகளும், ஆட்களும் எப்போதும் இருக்கக்கூடிய பிரதான சாலை என்றால் சரிதான். அந்த சிஎஸ்ஐ சர்ச்சில் எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றும் சிஎஸ்ஐ சர்ச்சில் பிரையர் நடந்து, ஆட்கள் நிறைய பேர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் டேவிட்டின் மூன்று கடைகளும் திறந்துதான்

இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று பாப்பா வீட்டிலும் ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை. பாப்பா இறந்து விட்டார் அவர்கள் உறவினர்களும் இல்லை. அந்த வீட்டில் ஆட்கள் இருக்கிறார்கள் என்றாலும், சிசிடிவி உள்ளது என்றாலும் ஆட்கள் இல்லை, சிசிடிவி உள்ளது. அது ஆள் இல்லாமல் போட்டிருக்கிறதோ, இல்லையோ என்று தெரியாது. ஆரல்வாய்மொழியிலிருந்து பூதப்பாண்டி செல்லக்கூடிய பிரதான சாலையில் இருந்து எங்கள் வீட்டிற்கு செல்லக்கூடிய சாலை 10 அடி அகலம் உள்ளது என்றால் சரிதான். கிறிஸ்துநகர் செல்லும் பாதையில் 300 அடி தொலைவில் மேற்கு பக்கம் பார்த்து 5 அடி பாதை உள்ளது என்றாலும் அந்த பாதை வழியாக தான் எங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றாலும் சரியல்ல அது 150 அடி தொலைவில் அந்த சந்து உள்ளது. எங்களுடைய செங்கல் சூளைக்கு அருகே உள்ள சுடுகாடு வழியாக எங்கள் வீட்டிற்கு செல்வதற்கு ஒரு 5 அடி வண்டிப் பாதை உள்ளது என்றால் சரிதான். பாப்பா வீட்டை சுற்றி சுமார் 7 அடி உயரத்தில் மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். கிறிஸ்து நகர் தெருவின் கிழக்கு பக்கம் பாப்பா வீட்டிற்கு எதிர்புறம் கே.கே. பவுண்டேசன் இடத்தை சுற்றி மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். வில்லவிளை செல்லக்கூடிய ரோட்டில் இருந்து பார்த்தால் பிரதான சாலை சேரும் இடம்தான் தெரியும் அந்த ரோட்டின் இடதுபுறமோ, வலதுபுறமோ தெரியாது என்றால் சரிதான். சந்தவிளையில் இருந்து சாந்தி என்பவர் எங்கள் சூளையில் வேலை பார்த்தாரா என்றால் இல்லை. எனது கணவருக்கு மாந்தீரிக வேலை தெரியுமா என்றால் தெரியாது. மாந்தீரிகம் செய்து பெண்களை வசியப்படுத்தும் கலையும் அவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவர் மாந்தீரிக சம்பந்தமாக சுடுகாடு, கோவில் ஆகிய இடங்களில் வீட்டிற்கு வராமல் இரவு நேரங்களில் சுற்றுவார் என்றால் சரியல்ல. அந்த சாந்தி என்ற பெண்ணை வசியப்படுத்தி கூட்டி சென்றார் என்று எனது கணவருக்கு பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. அதிலும் அந்த குடும்பத்துடன் எனது கணவருக்கு முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. கலைமதி என்ற பெண்ணையும் எனது கணவர் வசியப்படுத்தி கூட்டிச்

சென்றார் என்றால் சரியல்ல. கனி மருத்துவமனையில் எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால் அங்கு வரவில்லை. ஆசாரிபள்ளத்திற்குதான் வந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக ஆசாரிபள்ளம் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. அந்த தினத்திற்கு அப்புறம் போலீசார் என்னை பார்க்கவே இல்லை என்றால் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால் எதிரிகளை பிடிக்க வரும்போது விசாரித்தார்கள். அ.சா.ஆ. 1 மனுவில் எனது கணவரின் மண்டையை ஏற்கனவே ஒரு முறை எதிரி விஜயன் உடைத்ததாக சொன்னேனா என்றால் இல்லை. அந்த புகார் மனு கொடுத்தபிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனக்கு போலீசார் வாசித்துக் காண்பித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் புலன் விசாரணை அதிகாரி நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றாலும் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றாலும் முன் தேதியிட்டு அ.சா.ஆ. 1 ஆவணம் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. இரண்டாவது எதிரி ஆர்.சி. வகுப்பை சார்ந்தவர் என்றால் அவர் ஆர்.சியும் இல்லை சிஎஸ்ஐ யும் இல்லை. நான் சிஎஸ்ஐ வகுப்பை சார்ந்தவரா என்றால் இல்லை நான் ஆர்சி. எனது கணவரின் சொந்த ஊர் குளச்சல் என்றால் சரியல்ல கடியபட்டணம். எனக்கு பூர்வீகம்ஆரல்வாய்மொழிதான் என்றால் சரிதான். எனது கணவர் தன்னுடைய முதல் மனைவி ப்ளோராவை சட்டப்படி விவாகரத்து செய்யாமல் என்னை திருமணம் செய்து கொண்டார் சரியல்ல. அவருக்கு விவாகரத்து ஆன பிறகுதான் என்னை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு பிறந்த பிரபாகரன் என்னுடைய வீட்டிற்கு வந்து அடிக்கடி எனது கணவருடன் தகராறு செய்வது வழக்கம் என்றால் சரியல்ல. அவனும் என்னுடைய மகன்தான். அவ்வாறு பிரபாகரன் பலமுறை தகராறு செய்து ஊரில் சமரசம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பையனும், எனது கணவர் மீது முன் விரோதம் கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் எங்கள் ஊரில் அடிமுறை கற்ற ஆசான் என்றாலும் அவர் சொல்வதுதான் சட்டம் என்றாலும் சரியல்ல. எனது

கணவரை யார் எதுத்து பேசினாலும் வர்மமுறையில் அவர்களை தாக்குவார் என்றாலும் சரியல்ல. அப்படி இருந்தால் அந்த நான்கு பேரையும் அவரே கொன்றிருப்பார். எனது கணவருக்கு எங்கள் ஊரில் ஏற்பட்ட சாதிக் கலவரத்தில் சூளை பக்கத்தில் வைத்துதான் யாரோ முகம் தெரியாத நபர் அவரை தாக்கியுள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல. எனது கணவரை மருத்துவமனைக்கு பைக்கில் கொண்டு சென்றதாக சொல்லும் சமயத்தில் அவருக்கு உடலில் இரத்தம் வடிந்திருந்ததா என்றால் வடிந்திருந்தது. ஸ்டீபன் வண்டியை ஓட்ட எனது கணவர் நடுவில் உட்கார வைத்து, பின்னால் சண்முகநாதன் உட்கார்ந்து கொண்டு எனது கணவரை பிடித்துக் கொண்டாரா என்றால் ஆமாம். அப்படி பிடிக்கும்போது ஸ்டீபனுக்கும், சண்முகநாதனுக்கும் சட்டையில் இரத்தம் பட்டது என்றால் சண்முகநாதனுக்கு இரத்தம்படவில்லை. ஸ்டீபனுக்கு இரத்தம்பட்டது. அதை போலீஸ்காரர்கள் வாங்கவில்லை. நான் சொல்வது போல சண்முகநாதனோ, ஸ்டீபனோ எனது கணவரை பைக்கில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவில்லை என்றாலும் சூளையிலிருந்தே எனது கணவரை 108 ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. எனக்கு போலீசாரோ வேறு யாரோ எவ்வாறு சாட்சி சொல்ல வேண்டும் என சொல்லிக் கொடுத்தார்களே என்றால் நான் பார்த்ததை நான் சொல்வதற்கு வேறு யார் சொல்லி தரவேண்டும். எனது கணவருக்கும், எனது பிள்ளைகளுக்கம் முகம் தெரியாத நிறைய எதிரிகள் உண்டு என்றாலும் அதேபோல விளையாட்டு கலைகள் சொல்லிக் கொடுப்பதிலும் எதிரிகள் உண்டு என்றாலும் அந்த முன் விரோதங்களில் முகம் தெரியாத நபர்கள் எங்கோ வைத்து தாக்கியதை பொய்யாக இந்த எதிரிகள் மீது ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், இரண்டாவது எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், இரண்டாவது எதிரி அந்த ஊரிலோ இல்லை என்றால் சரியல்ல. அவர் அப்போது சென்னையில் வடபழனியில் உள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவரை எப்படியாவது சிக்க வைக்க

வேண்டும் என்று போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (3 ஆம் எதிரி தரப்பில்) :-

அ.சா.ஆ. 1 புகார் மனுவில் சாட்சி சண்முகநாதன் எந்த தெருவில் எந்த திசையில் இருந்து எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மணிகண்டன் எந்த ஊர், அவர் அப்பா பெயர், அவர் முகவரி என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்பழகன் வீட்டிற்கு அடிக்கடி வருவார். EB யில் வேலை செய்கிறார் என்று தெரியும். இந்த விவரத்தையும் போலீசார் விசாரணையிலோ, புகார் மனுவிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. யாரும் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. பொதுவாக தெரிந்த நபரை அடையாளம் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். கனி மருத்துவமனையில் இருந்து ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் போய்விடலாம் என்றால் சரிதான். எனது கணவர் அடிப்பட்டிருக்கும்போது அதெல்லாம் நான் யோசிக்கவில்லை. 108 ஆம்புலன்சில் கனி மருத்துவமனையிலிருந்து ஆசாரிபள்ளம் கொண்டு செல்லும்போது ஆம்புலன்சில் யார் யார் சென்றார்கள் என அ.சா.ஆ. 1 புகார் மனுவிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையிலேயே கனி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தால் கனி மருத்துவமனையிலிருந்து போலீசாருக்கு தகவல் கொடுத்திருப்பார்களா என்றால் தகவல் கொடுத்தார்களா இல்லை என்று எனக்கு தெரியாது. பொதுவாக சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு கால் மணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் நான் போன 1 மணி நேரம் ஆகும். வேறு யாரும் சென்றால் கால் மணி நேரத்தில் போய்விடலாம். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அப்படி நடந்திருந்தால் உடனடியாக புகார்

கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் மனுவிலோ, போலீசாரிடமோ எனது கணவரை மணிகண்டன் தோளில் பிடித்துக் கொண்டதாக கூறவில்லை என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. 05.05.2023 அன்று நடந்ததாக நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் மூன்றாவது எதிரிக்கும் இந்த சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது கணவரும், மணிகண்டனும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மணிகண்டனும், மற்ற எதிரிகளும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மணிகண்டனுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மணிகண்டனுக்கும், எனது கணவருக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் எதிரிகள் மீது வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (4 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

தங்க ஜோஸ் க்கும், எனது கணவருக்கும் முன் விரோதம் கிடையாது என்றால் சரியல்ல. இருந்தது. தங்க ஜோஸ் எனது கணவரை பின்புறமாக பிடித்துக் கொண்டார் என அ.சா.ஆ. 1 புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, நீதித்துறை நடுவர் முன்பு வாக்குமூலம் அளிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் சரிதான். தங்க ஜோஸ் எனது கணவரை தடுத்தி நிறுத்தவில்லை என்றால் அவர் தடுத்து நிறுத்தவில்லை. அவர் பின்னால் நின்று கழுத்தை பிடித்துக் கொண்டார். நான்காவது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.